செ.வெ.எண்:686 நாள்:13.08.2010

# செய்தி வெளியீடு

## விருதுநகர் மாவட்டத்தில் வெடிவிபத்தில் உயிரிழந்த அரசு அலுவலர் குடும்பங்களுக்கு தலா 5 இலட்சம் ரூபாய் நிவாரண நிதி உதவி.

## முதலமைச்சர் கலைஞர் ஆணை!

விருதுநகர் மாவட்டம், சிவகாசி பகுதியில் அனுமதியின்றி சிலர் வீடுகளிலேயே பட்டாசு தயாரித்து வருவதாகக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து, மீனாட்சிபுரம் கிராமத்தில் துரைசாமிபுரம் என்ற இடத்திலுள்ள பட்டாசுத் தொழிற்சாலையில் 10.8.2010 அன்று வருவாய்த்துறை மற்றும் காவல்துறை அதிகாரிகள் ஆய்வு செய்தனர்.

அப்போது எதிர்பாராதவிதமாக அங்கு ஏற்பட்ட வெடிவிபத்தில் நல்லி உள்வட்ட வருவாய் ஆய்வாளர் திரு.ராஜ்மோகன், காளிஞ்சம்பட்டி கிராம நிர்வாக அலுவலர் திரு.குமாரசாமி, சாத்தூர் வருவாய் ஆய்வாளர் திரு.ராஜேஸ்கண்ணா, மென்மணி வருவாய் ஆய்வாளர் திரு.சந்திரசேகரன், சாத்தூர் காவல் ஆய்வாளர் திரு.அப்துல் லத்தீப், விருதுநகர் ஆயுதப்படை காவல் துணை ஆய்வாளர் திரு.ரமேஷ், காவலர்கள் திரு.கணேசன், திரு.ஆசைக்கனி ஆகியோர் காயமடைந்தனர். அவர்கள் அனைவரும் உடனடியாக மதுரையில் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிசிச்சை அளிக்கப்பட்டது. இவர்களில் சிகிச்சை பலனின்றி ஐந்து பேர் உயிரிழந்துள்ளனர்.

இத்துயரச் செய்தி தமது கவனத்திற்கு வந்ததைத் தொடர்ந்து மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்குத் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார். அத்துடன் உயிரிழந்த அரசு அலுவலர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியில் இருந்து 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயும், அரசு அலுவலர் குடும்ப நல நிதியில் இருந்து 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயும், என மொத்தம் 5 இலட்சம் ரூபாய் வீதம் வழங்கப்படும் என்றும், காயம் அடைந்து சிகிச்சை பெற்று வருபவர்களின் மருத்துவச் செலவு முழுவதையும் அரசே ஏற்கும் என்றும், உயிரிழந்த அரசு அலுவலர்கள் குடும்பம் ஒவ்வொன்றிலும் தகுதியுடைய ஒரு வாரிசுதாரருக்கு, உடனடியாக முன்னுரிமை அளித்து அரசுப்பணி நியமனம் வழங்கப்படும் என்றும் முதலமைச்சர் கலைஞர் அறிவித்து ஆணையிட்டுள்ளார்.

* * *

வெளியீடு:

இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத் துறை, தலைமைச்செயலகம், சென்னை–9